10

மறந்திரு மறந்திருன்னு
மனுசரெல்லாம் சொல்லுதாக
உங்களை நான் மறக்க
உலகத்தில மருந்தே இல்லை...

-நாட்டுப்புறப் பாட்டு

அவரைப் பார்க்கவே மூணு நாள் தவமிருக்க வேண்டியிருந்தது. வாசல் கூர்க்கா, ராஜபாளையம் நாய்கள், உதவியாளர்கள் எல்லோரையும் தாஜா செய்து கால்கடுக்க வாசல் மரத்தடியில் காத்து நின்று வாசல் குழாயிலிருந்து தண்ணீர் பிடித்துக் குடித்து அங்கே இங்கே நகராமல் வண்டி போகும் போதும், வரும் போதும் உருவமே தெரியாத கறுப்புக் கண்ணாடிக்கு உள்ளே காரில் அவர் உட்கார்ந்திருப்பார் என்ற நினைப்பில் நம்பிக்கையில் பெரிதாய்க் கும்பிடு போட்டு மூணு நாள் முழுசாய்த் தவமிருந்தான் சின்னராசு.

அவனின் நச்சரிப்பும் கெஞ்சலும் பொறுக்காமல் தான் உதவியாளர் நேரம் வாங்கித் தந்தான்.

'மூணே நிமிஷந்தான் பேசணும்...அப்புறம் ஒட்டிக்கினு நின்னா..இன்னொரு தரம் உள்ளார வுடமாட்டேன்...'

'ஐயோ மூணு நிமிஷம் கூட ஜாஸ்திய்யா...இந்த மனுவக் குடுக்கனும் அம்புட்டுத்தான்...'

அப்புறமும் ஒரு நாள் நிற்க வைத்துத்தான் பார்க்க முடிந்தது.

வெளுத்த வேட்டியும், ஸெல் போனும், ஸெண்ட் மணமும், உதவியாளர் படையும், உர்உர்ரென்று உறுமும் நாய்களுமாய் ஏஸி ஜில்லிப்போடு இருந்தார்.





தலையோடு காலாய்த் தரையில் பதியக் கீழே விழுந்தான் சின்னராசு.

"கும்பிடறேன்யா..."

"ம்...எழுந்திருப்பா..நமக்கு இதெல்லாம் புடிக்காது தம்பி. நா வித்தியாசமானவன்..."

"ஐயா பெரியவங்க... நான் வெறும் பூச்சி..."

" இருக்கட்டும்பா...எழுந்திரு..."

"தாழாங்கும்பம்யா எனக்கு. போனதரம் கூட எல்லா ஓட்டும்மொத்தமா உங்களுக்குத் தான் போட்டம்..."

"ம்...ம்...." - அமர்த்தலான குரல்.

"இந்தத் தரம் மழைல குடிசைங்கள்லாம் பிச்சுக்கிச்சு..கொஞ்சம் நிவாரணம்..."

"என்ன நிர்வாணமா? அதெல்லாம் உனக்கில்ல தம்பி..."

பெருங்குரலில் அவர் சிரிக்க..உதவியாளர்கள் சிரிக்க.. நாய்களும் வள்வள்வள்ளென்று உறுமின.

"இல்...இல்லய்யா..பண உதவி ஏதாச்சும்..."

"ஏம்ப்பா...குடுத்தாச்சுல்ல...?"

"அப்பவே குடுத்தாச்சுய்யா...எழுவத்தஞ்சு ரூவா..." பக்கத்தில் வந்து அவரின் காதைக் கடித்தான்.

"அந்த வகையில் நமக்குச் சுளையாப் பத்து லட்சம் லாபம்யா.."

அடுத்த காதுக்குக் கூட கேட்காத வகையில் ரகசியம்.

"அட...பெரீய அமௌண்ட்டு தான்..ஏம்ப்பா குடுத்தப்பறம் என்ன? வீடா கட்டித்தர முடியும்?"

"இல்லேய்யா..பாத்துச் செய்யுங்கய்யா..நம்ப குப்பத்துலேயே ஒரு ஆயிரம் வோட்டு இருக்கு. ஐயா வந்து பாக்கலேன்னு கோ்வமா இருக்கானுவ...அந்தப் பார்ட்டி ஆளுங்க வந்து பாத்து அம்பது அம்பது ரூபா. ரெண்டாந் தவணை குடுத்தானுவ..அதான் ஐயா காதுல போட்டேன்..."

"ஓ ...ரூட்டு அப்படிப் போவுதா...? ஏம்ப்பா..இதைக் கோட்ட விட்டீங்களே? கவுத்துட்டாங்கன்னா அப்புறம் எவங்காலை நக்குவீங்க? குழிபறிச்சுடாதீங்கலே.."

"ஐயா..பிஸியா இருந்தீங்க. நேரமில்லாம..."

"நேரமில்லேன்னா..திங்காம இருக்கமா? தூங்காம இருக்கமா? அங்கிட்டுப் போகலேன்னா ஆயிரம் வோட்டு அவுட்டு..என்னய்யா பண்றீக.. எனக்கே வேட்டு வச்சுருவீக போலிருக்கே..."

கடிந்தார்.

சின்னராசுவின் தோளில் கைபோட்டு ஓரமாய்க் கூட்டிப் போனார். குழைந்தார்..

"தம்பி. வெவரமான ஆளா இருக்க... நா வாரேன்.. ரெண்டு மூணு நாளு கழிச்சு வாரேன்..தாவாங்குப்பம்..இன்னம் ரெண்டு குப்பத்துக்கு ரோடு போடற காண்ட்ராக்டுக்குத்தான் நாயா அலையறேன்..நீ கொஞ்சம் கட்டுப்பாடா வையி.. சமாதானப்படுத்து.. நம்ம ஆட்கள் சிதறிடாமப் பார்த்துக்க..துடிப்பா இருக்கே.. அப்பப்ப வந்து போயிடச் வச்சுக்க.. பெரீய அளவுல கொண்டு வாரேன் உன்னை.. சரியா..?"

பையில் கைவிட்டுக் கொத்தாய் எடுத்தார். திணித்தார் கைகுலுக்கினார்.

"இது உனக்கு. இனிம நீ நம்ம ஆளு..வந்து போ..வளமாக்கிடறேன்.. ஆனா உண்மையா இருக்கணும்.. நேர்மையா இருக்கணும்.. நாக்கைஅறுத்துக்கோன்னா அறுத்துக்கணும்.. இருப்பியா..?"

"ம்..ஐயா அப்படியே எனக்கொரு வேலை..."

-மனுவை நீட்டினான்.

"அட..ஆயிரத்துக்கு வழி காட்டறேன்..நூத்துக்கு ஏங்கறியே..போ..போ.. குப்பம் இனிம நம்மளுது.. சரியா..?"

மனுவைச் சுருட்டிக் குப்பைக் கூடையில் போட்டார்.

"யப்பாடி...பெரிய ஆளுத்தேன் நீ சின்ராசு..."





கவுன்ஸிலரைப் பார்ப்பதே தெய்வத்தைப் பார்ப்பது மாதிரி அரிதான விஷயம்..அவர் கையாலேயே ஐநூறு ரூபாய் வாங்கி வந்த சின்னராசுவைப் பெருமையாய்ப் பார்த்தாள் சின்னப்பொண்ணு.

"இந்தா பொறை தின்னு..."

கடக்முடக்கென்று பொறையை வாயில் போட்டு நொறுக்கின சின்னராசு ரெண்டு நீட்டினான் அவளிடம்.

"ஆமா..ரூபா முழுசும் அத்தைட்ட குடுத்தாச் செலவுக்காவுமே? மாமா மருந்துக்காவும்..சுரேசு சம்பத்துக்கு உப்பு உறைப்பா ஆக்கிப் போடலாம்..எங் கூரையப் போட்டுக்கன்னு குடுத்திட்ட..?"

" நா கட்டிக்கப் போறவ பத்திரமா இருக்க வேணாமா? நாலுபேரு.. ஓட்டை வளியா எட்டிப் பார்க்கவா...?"

கண்களில் காதல் வழிந்தது.

ஏழைக்கும் பணக்காரனுக்கும் யாருக்குமே காதலைச் சொல்லும் முதல் வழி கண்கள் தானே?

சின்னப்பொண்ணுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. நல்லவேளை மாமா இப்போதெல்லாம் வேலைக்கு வரக்காணோம். அவர் இருந்தால் சின்னராசு.. இப்படியெல்லாம் வாய் திறந்து சொல்வானா? அப்பன் பக்கத்தில் இல்லாத தைரியம்..சினிமா டயலாக் பேசுகிறான்.

"ஆமாமா.....நீ சொல்லிட்ட...அத்தைக்காரி என்னை அடிக்கற அடில மும்பாம்பல்லு பேந்துரும். மாமாவுக்கும் என்னை ஆகாதே..."

- கண்ணாடித் தம்ளரிலிருந்த டீயைச் சுழற்றி ஆற்றி உறிஞ்சினாள்.

"அந்த வெசனம் இப்ப என்னத்துக்கு? கைல நாலு காசு சேந்தாவுட்டு நாந்தேன் ராசா...ஆத்தாக்காரில்லாம் மூலைல குந்த வேண்டியது தான? ம்?"

"என்னவோ சின்ராசு. பொம்பள செம்மம். புருஷங்காரன்னு உன்ன மனசுல வச்சுட்டன். நீ சொல்றதுதேன் வேதவாக்கா இருக்கு..இந்த செம்மத்துல ஒன்னோட சேருவேனா பாக்கேன்.."

பழம்புடவையால் வாயைத் துடைத்தாள்.

பந்தாவாய் நூறு ரூபாய் நோட்டை நீட்டினான் சின்னராசு.

"கைல இருக்கற ஒத்த நூறு ரூபா நோட்டுக்கே இம்புட்டுத் [illegible] வருது சின்னு..கவுன்சிலரு கூட இருந்தா... செழிப்புத்தேன்..[illegible] ராசாவாயிடலாம்.."

"ம்.ம்..மசானத் தொளில விட..அதான் நாரத் தொளிலு தெரிஞ்சுக்க."

"ப்ச..அழும்பு பேசாத சின்னு..எம்போக்குல விடு..கவுன்சிலரு [illegible] வருவாரு..ரோடு கீடெல்லாம் சுத்தப்படுத்தணும். தோரணம் கட்டணும் வாரேன்.."

சட்டென்று வெட்டிக் கொண்டு போனான் சின்னராசு. கண்ணிலிருந்து மறையும் வரை அவனையே பார்த்த சின்னப்பொண்ணு மெதுவாய் சாலையைக் கடந்து சுடுகாட்டு வாசலுக்கு வந்தாள்..அது பாட்டுக்கு எந்த மாற்றமுமில்லாமல் அப்படியேதான் இருந்தது. அடித்த மழைக்கும் காற்றுக்கும் ஏற்பட்ட சேதத்துக்கும் அசைந்து கொடுக்காமல் மரங்கள் அதே கம்பீரத்தோடு...சுடுகாடு அதே அமைதியோடு...

எதற்கும் வளைந்து கொடுக்காத மரணத்தை மாதிரியே சுடுகாடு.

ஒரு வாரமாய் அவளைப் பார்க்காத அந்த நாய் .சட்டென ஓடி வந்தது ஊஊஊஊ என்று ஊளையிட்டு வாலைக் குழைத்துச் சுற்றி சுற்றி வந்தது அவளின் சீலையை முட்டி மோந்தது. அவளின் கையை நக்கியது.

"எப்பட்றா இருக்கே? மழைல தீனிக்கு என்ன பண்ணே? இந்தா துன்னு.."

பொறையைப் போட்டாள்.

"வாயுள்ள சென்மங்களே ஒருவாய்க் கஞ்சிக்கு வக்கில்லாம தவிச்சுதுங்க..வாயில்லாசெம்மம்..நீ இன்னாத்த துன்ருப்ப..? யார்ட்ட கேட்டுருப்ப..துன்னு.."

நாயின் கழுத்தைத் தடவினாள்.

கழுத்தை வாகாய்ச் சாய்த்து வைத்துப் பொறையைக் கடித்து நொறுக்க ஆரம்பித்தது நாய்.

"பொதைச்சதைத் தோண்டி எடுக்கணும் சின்னப் பொண்ணு..போலீஸ் கேஸாயிருச்சாம்..அப்பங்காரன் புகார் குடுத்திருக்கானாம். வரதட்சணை சாவு. வக்கீலு போலீஸுன்னு இப்ப வந்துருவாங்க..."





- அலுவலர் மணிமாறன் சொன்னதும் விசனப்பட்டாள் சின்னப்பொண்ணு.

பிணத்தை எரிப்பது கூடச் சுலபம் தான். புதைகுழி தோண்டுவதும் சுலபம் தான். புதைத்ததை தோண்டுவதுதான் நரக வேதனை. நரக தண்டனை.

"வேற வெட்டியான் இல்லியா டியூட்டில?"

"எங்க? வேற யாரு இருக்கா? இருசப்பன். உடம்பு இன்னந் தேறல்ல. தனவந்தன் மாமியா செத்துடுச்சாம். ரெண்டு நாளாகும் ஊர் திரும்ப. நைட் டியூட்டி ஆளுக்குப் பேதியாவுதாம். ராத்திரியே வரல்ல..நல்ல வேளை நைட்டு எந்தப் பொணமும் இல்ல. வந்துருந்தா..கதை கந்தலாயிருக்கும். இப்ப நீ தான் பண்ணனும்.."

"ப்ச..என்னா சார்? எப்பவுமே கஷ்டமான வேலைய எந்தலைலத்தான் கட்டுவீங்க..."

முணுமுணுத்தாள்.

"பண்ணு...கூடக் கொஞ்சம் போட்டுத் தர சொல்றேன். பார்ட்டி கொஞ்சம் வெயிட்டானதுதான்...அதான் பொதைச்சதையே தோண்ட வைக்கறாங்க..ரெண்டு மணி நேரத்துல முடிச்சுடு ...என்ன?"

"க்கும்..எந்த வெயிட்டான பார்ட்டியும் வெட்டியானுக்குக் கூட நூறு ரூபா போட்டுத் தரமாட்டான். சட்டம் பேசிட்டுப் போயிடுவானுக..சரி வுடுங்க சார்...கூடமாட யாருமில்லேயே.. தங்கச்சிங்க கூரை வேயுதுங்க வீட்டாண்ட.. நாமட்டும் எப்படிப் பண்ண..?"

"சம்பத்து சுரேசுக்குச் சொல்லி விட்டிருக்கேன். மசமசன்னு நிக்காத போ. நேரமாவுது..போலீஸு வந்துட்டா..கால்ல வென்னி ஊத்திக்கிட்டுப் பறப்பாங்க...இரு இரு..எந்தக் குழின்னு சொல்றேன்"

லெட்ஜரைப் புரட்டினார் மணிமாறன்.

"போய்ச் சேந்து மண்ணுக்குள்ளாற பொதைஞ்சப்பறமும் நிம்மதியா இருக்கவுடாதுங்க நம்ம சனம். இப்பப்பாரு..பொணம் பொணமாவா இருக்கும்? கண் கொண்டு காங்க முடியாது. தொட்டா சென்மத்துககும் சோற எறங்காது..."

புடவை முந்தானையைப் பிய்த்துப் பிய்த்து எரிச்சல் பட்டாள் சின்னப்பொண்ணு.

குழி நினைப்பிருக்கட்டும்.."

"வலது கோடில பத்தாவது குழி நினைப்பிருக்கட்டும்.."

அடையாளம் சொன்னார். லெட்ஜரில் விவரம் சேகரித்து.

"இதோ வந்துட்டாளுங்களே..தம்பிகளா..இவங்க கூடப் போங்க. பொதைச்சதைத் தோண்டணும்..சோலிய வெரசா முடிங்க..கூலி போட்டுத் தரச் சொல்றேன்.."

வெட்டி நின்ற உறவு சனம். வேலைக்காக ஒன்றானது. தவிர மழை நேரத்தில் சத்துணவுக் கூடத்தில் ஒன்றாயிருந்ததால் சின்னதாய்ச் சிரிப்பு. செல்விக்கும் தனத்துக்கும் கூட இந்தப் பசங்கள் தானே முறை மாப்பிள்ளை. எல்லாம் சரியாகி வந்தால்- இந்த உறவும் ஒட்டிக் கொள்ளும் தானே?

"சம்பத்து..ரெண்டு பாண்டு தூக்கினு வா.. சுரேசு..மண்வெட்டி எடுத்தா. டேல்ரும்புல இருக்கும் பாரு-நா போறேன்..கிழக்கால பத்தாங் குழி.."

கடப்பாரையைத் தூக்கிக் கொண்டு போனாள்.

பாதையெல்லாம் கூட சேறும் சகதியுமாயிருந்தது. இன்றைக்கு வேலை சுலபமாய் இருக்கப் போவதில்லை என்று மட்டும் புரிந்தது.

குழியை அடையாளம் பார்த்துக் கடப்பாரையை 'நக்'கென்று மண்ணில் கொத்தினாள் சின்னப்பொண்ணு. துர் நாற்றமும் ஒருவித வாயுவும் அப்போதே கிளம்பிப் பீறிட்டது. 'இந்தக் கண்றாவி தான் வேணாங்கறேன்' சின்னதாக சொல்வது மாதிரி கேட்டது.



நாற்றப் பாண்டம் நான்முழத் தொன்பது
பீற்றத் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
ஓயா நோய்க்கிடம் ஓடும் மரக்கலம்
மாயா விகாரம் மரணப் பஞ்சரம்.

- பட்டினத்தார் பாடல்

## 11

நல்ல வேளை கொள்ளையாய் அடித்த மழையில் பூமியே அடிவரைக்கும் ஈரமாகியிருந்தது. குளிர்ந்திருந்தது. நனைந்திருந்தது. கோடைக்கால நிலம் மாதிரி வறண்டு பாறையாய் இறுகியிருக்கவில்லை. கடப்பாரையால் பிளப்பது சுலபமாய்த்தான் இருந்தது. மூச்சை 'தம்' பிடித்து கடப்பாரையை இறுக்கித் தூக்கி, ஒரே போடாய் மண்ணில் போட்டுப் பிளந்தெடுக்கும் கஷ்டம் ஏதுமில்லை. ரொட்டி வெட்டுவது மாதிரி. வெண்ணெய் வெட்டுவது மாதிரி சுலபமாய் மண் பிளந்து போனது. மழை நீரால் சேறும் சகதியுமாய்ச் சொத சொதவென்றிருந்தது. சின்னப்பொண்ணு கடப்பாரையால் பிளக்க சுரேசு மண்வெட்டியால் அள்ள சம்பத்து பாண்டு நிறைய அள்ளிப் பக்கத்தில் குவித்தான்.

மண் வேண்டுமானால் வெட்ட சுலபமாயிருக்கலாம்.

அந்த நாற்றம்? துர்நாற்றம்? உயிரைப் பிடுங்கும் நாற்றம்? குப்குப்பென்று சூடாய்க் கிளம்பி மயக்கம் வரவழைத்துக் கிறுகிறுக்க வைத்த மண் வாயுவின் நாற்றம்...?

வெயில் நேரத்தில் கூட இவ்வளவு நாரசாரமாக இருக்காது. நரகமாக இருக்காது. பீழை நாற்றம்

பிணநாற்றம் குறைவாய்த்தான் இருக்கும். மழைக் காலத்தில் தாளமுடியாத அளவுக்குத் துர்நாற்றம்.

குழி ஓரடி-ஒன்றரையடி-ரெண்டடி என்று ஆழம் அதிகமாக அதிகமாக நாற்றத்தின் அடர்த்தியும் ஜாஸ்தியானது. குடல் புரட்டிக் கொண்டு வந்தது. மார்புக்கூடு பெயர்த்தெடுத்து வாய் வழியே நாக்கு தள்ளி வெளியே விழுவது மாதிரி இருந்தது. வாயெல்லாம் நுரைத்தது. ரெண்டு நாள் அழுகின செத்த எலி நாற்றமே.. ஊரெல்லாம் மூக்கை மூட வைக்குமே..இது எவ்வளவு கொடுமை? பிணம்.. ரெண்டாம் நாளே அழுகி நாறும் போது..இது புதைக்கப்பட்ட பிணக்குழி. நாற்றத்தின் வீரியம் சும்மாவா..?

மனிதக் கழிவு, அழுகிய முட்டை, செத்த பிராணி, குப்பைக்கூளம், புழுவும் பூச்சியுமாய் நாறும் சாக்கடை சகலமும் சேர்ந்த கலவை நாற்றம் அங்கே.

நெளிநெளிவாய்ப் புழுக்கள் வேறு.. அவற்றின் நாற்றமும். அங்கொன்றும் இங்கொன்றுமாய் வெளியே கிளம்பி, கொத்துக் கொத்தாய் முடிச்சு முடிச்சாய் சாரை சாரையாய் நெளிந்தன, மண்ணைக் குடைந்தன.

நாலு நாள் முன்னால் புதைத்தது.

சுழற்றியடித்த பேய்மழையில் எரிப்பது கஷ்டம்..வேண்டாமென்று புருஷன்காரன் சொன்னதால்..புதைத்தது. இப்போது அப்படியேவா இருக்கும்.?

பிணத்தின் நெற்றியில் இடித்த கடப்பாரை நக்கென்று வழுக்கி உள்ளே போனது.. சிதிலமடைந்த உடம்பு, மழையில் ஊதி புழுவில் நாறி கொளகொளவென்றிருந்த உடம்பு. மனித உடம்பு தான் என்று அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்குக் குழைந்து போயிருந்த உடம்பு. நெளிந்த புழுக்கள் முகத்தை அரித்திருந்தன. புழுக்கள் மேய்ந்த தோலை துருத்திக் கொண்டு அழுகிய சதையைத் துருத்திக் கொண்டு எலும்புக் கூடு தெரிந்தது.

முந்தானையால் மூக்கை இறுக்கிச் சுற்றி முகத்தைக் கட்டியிருந்தாள் சின்னப்பொண்ணு. சம்பத்தும் சுரேசும் சல்லாத் துணியால் மூக்கைக் கட்டியிருந்தார்கள். பாடு பேசாமல் அவரவர் வேலையில் சுறுசுறுப்பாயிருந்தார்கள். எவ்வளவு சீக்கிரம் முடிக்கிறோமோ அத்தனை நல்லது என்கிற நினைப்பு.

காற்று- விர்விர்ரென்று சுழன்றடித்து நாற்றத்தைச் சுமந்து போனது. காக்கைகள் சுற்றி நின்று காகாகாவென்று கத்தித் தீர்த்தன. நாய்கள் நாக்கைத்





தொங்கப் போட்டு, புஸ்புஸ்புஸ்ஸென்று மோப்பம் பிடித்து உணவு தேடிச் சுற்றிச் சுற்றி வந்தன. பசி வெறி அவற்றின் கண்களில்.

சின்னப்பொண்ணுக்கு- இது தான் முதல் அனுபவம். புதைப்பதும் எரிப்பதுமாய்த்தான் இது நாள் வரை செய்திருக்கிறாள். இந்த வேலை தரும் கிறக்கத்துக்கும், மயக்கத்துக்கும் பயந்து மற்ற வெட்டியான்களே கூட அவஸ்தைப்படும் வேலை, தவிர்க்க இயலாமல் இன்றைக்கு வசமாய் மாட்டிக் கொண்டாள்.

கடப்பாரையைத் ‘தம்’ கட்டித் தூக்க முடியாத மாதிரி கைகால் வெலவெலத்தது. நடுங்கியது. அத்தனை குளிர்க்காற்றிலும் கூட வியர்த்துக் கொட்டியது. கண் இருண்டது சின்னப்பொண்ணுக்கு. நேற்று மதியம் குடித்த கேவுறுக் கஞ்சி கொஞ்ச நேரத்துக்கு முன்னால் சின்னராசு வாங்கித் தந்த தேநீர் என்று வயிற்றில் காலியிடம் நிறையவே இருந்ததில் கடபுடவென்று புரட்டியது.

“ நீத்தண்ணியாச்சும் ஒரு மடக்குக் குடிச்சிருக்கலாம். கெறக்கம் குறைஞ்சிருக்கும்...”

“வூட்டுல வெறவு நனைஞ்சி போச்சி. ஆக்கி எறக்க ஏதுமில்ல. டீக்கடைல ரெண்டு பன்னு தின்னோம். கொஞ்சமாச்சும் உசிரு இருக்கு இல்ல..இந்த நாத்தத்துக்கு அப்பவே மயக்கமாயிருப்போம்...”

சம்பத்து மண்வெட்டியால் மண்ணை அள்ளினான்.

“ சுரேசு..இந்தா..”

மண்நிறைந்த பாண்டுவை நீட்டினான்.

“ப்ச..இரு வாரேன் மூச்சடைக்குது. கிறுகிறுப்பா இருக்கு. நாலெட்டு வெரசா வைக்க முடியல்ல...”

பதினெட்டு வயசு இளைஞர்கள் தான். ஆனாலும் உடம்பு நோஞ்சானாய் இருப்பதால் ரொம்பவே இளைப்புத் தெரிந்தது ரெண்டு பேரிடமும்.

“கொஞ்சோம்ல ஊத்திட்டு வந்திருக்கணும்ல... தாலியறுக்காமத் தாக்குப் புடிக்கலாம்...”

“இத்தினி நலி புடிச்ச சோலியால்ல இருக்கு. கூப்பிட்டனுப்பினாக வந்தம். நம்பளையே உசிரோட பொதைக்கற மாதிரி சோலின்னு இப்பத்தான் தெரிஞ்சுது...”

இதைப் பேசுவதற்குள் கூட நாற்றத்தில் மயக்கம் வந்தது. உலக சுற்றியது. கண் இருண்டது. நுரைத்துக்கொண்டு வயிறு புரட்டியது அப்படியே தரையில் குத்த வைத்து உட்கார்ந்து வாந்தியெடுத்தான். சுற்றி குழுமியிருந்த நாய்கள் அவன் தள்ளிப் போகக் காத்திருந்த மாதிரி பாய்ந்து நக்கித் தீர்த்தன. இன்னும் ரெண்டு நாய்கள் குழிக்குள்ளிருக்கும் அழுகின சடலத்தைக் குறி வைத்தன . தாவி ருசி பார்க்க ஏதுவாகக் குழி ஓரத்தில் நின்று குரைத்தன.

"ப்சீ– தூரப்போ...இத்தாலேயே ரெண்டு போடுவேன்"

குழிக்குள்ளிருந்து சம்பத்து மண்வெட்டியைத் தூக்கிக் காட்டி விரட்டினான். அதற்குள்ளாகவே நாக்கு குழறியது.

"ஏய் சின்னப்பொண்ணு...வேலை முடிச்சியா...? அவங்க வர்ற நேரமாச்சு..."

மணிமாறன் முன் ஜாக்கிரதையாகக் கைக்குட்டையால் மூக்கை இறுக்கி மூடி அந்தக் கோடியில் நின்று குரலெடுத்துக் கத்தினார்.

உரக்கப் பதில் சொல்ல முடியாத மாதிரி துவண்டிருந்தார்கள் இவர்கள்.

"ஏய் பொட்டைப் பசங்களா சுணங்காதீங்கடா. எல்லோரும் வந்தபுறம் தோண்டிட்டிருந்தா நம்மளைக் குழி தோண்டிப் புதைச்சுடுவாங்க..ம்..ம்.. வெரசாமுடிங்க..."

நாலெட்டில் வேகமாய் நடந்து போனார்.

சின்னப்பொண்ணு தோண்டத் தோண்ட கால், கை, உடம்பு, முகம் என்று சகல இடத்திலும் புழுக்கள் ஏற ஆரம்பித்தன.

வேகவேகமாய் மண்ணை அள்ளினான் சம்பத்து. நாலடிப் பள்ளத்திலிருந்து மேலே தூக்கி நீட்டினான். உடம்பு மேலேயே நிறையப் புழுக்கள் கொத்தாய் விழுந்து நெளிந்தன. சுரேசு குனிந்து பாண்டு வாங்கினான்.

"வெரசாப் போயிட்டு வா சுரேசு. இந்தக் கண்றாவியெல்லாம் வேணாம்னுட்டுத்தேன் சின்ராசு இந்த நாரத்தொளிலு வேணாங்குது. நாம மாட்டிக்கிட்டோம்..விட்டா நரகத்துக்குப் போயி உசிரைப் புடிச்சிக் கொண்டான்னுவாங்க நம்ப ஜனங்க..யாருக்கு வேணும் இம்புட்டு நலி..."

சம்பத்து மாதிரி புலம்பும் சக்தி கூட சின்னப்பொண்ணுக்கு இல்லை. கடப்பாரையால் வெட்டி வெட்டித் தோள்பட்டையே கழன்று போனது. எக்கி எக்கித் தோண்டி வயிறு வலித்தது. நாற்றம் தாங்க முடியாமல் வாய்





நுரைத்துக் குழறியது. தலையோடு காலாய் அருவருப்பு ஒவ்வொரு அங்குலத்திலும் ஆக்கிரமித்தது

"எக்கோவ்.. ம்ஹீம் முடியல்ல. புழு அரிக்குது. கால் சொரியுது நா மேல ஏறவா? நாத்தம் குடலைப் புடுங்குது. மயக்கம் வருதுக்கா..."

சம்பத்தின் கண்கள் கிறங்கின.

"ம்.. நீ மேலே ஏறு சம்பத்து..இந்தக் கடப்பாரையைப் புடிச்சுக்க. பல்ட்டி அடிச்சு ஏறு...ம்...ஏறு–"

சம்பத்தை 'தம்' பிடித்துத் தூக்கி விட்டாள்.

நாக்கு வரண்டது. தாகம் வாட்டியெடுத்தது. ஆனாலும் ஒரு சொட்டுக் கூட குடிக்க முடியாது. அடி நாக்கின், மேல் அண்ணத்தின், குடலின், உயிரின், நுனி வரைக்கும் நாற்றத்தின் வாசனைத் துளி பச்சக்கென்று ஒட்டிக் கொண்டிருந்தது.

அழுகின பிணம் தயாராய் இருந்தது.

"சுரேச கீழ இறங்கச் சொல்லு..ஒரு கை தூக்கணும்.." இழுத்துச் செருகிய புடவையும், நைந்த பிளவுஸும், வியர்வைக் குளியலும், பரட்டைத் தலையும், களைத்த முகமும், நலிந்த உடம்புமாய் சின்னபொண்ணு உழைப்புக்கு அஞ்சாமல் பரபரத்தாள்.

சாக்கு மூட்டையில் சுரேசும் இவளுமாய்ப் பிணத்தைத் தூக்கினார்கள். மழை நீர் சொதசொதசொதவென்று கீழே சொட்டியது. கூடவே புழுக்களும் கொத்து கொத்தாய்ப் பொலபொலவென உதிர்ந்தன. பிணத்தில் இருந்த மண்ணிலும் புழுக்களின் ராஜ்ஜியம் நூறு, ஆயிரம், லட்சம், கோடியாய்ப் புழுக்கள். அழுத்தமாய் நின்ற காலின் அடியில் குறுகுறுகுறுவென்று ஊர்ந்தன,

வாயை இறுக்கி முடி மூச்சைப் பிடித்துத் தூக்கினார்கள். வழியும் நீர் வாய்க்குள் இறங்கி விடக் கூடாதே.? மேலே சம்பத்து பிணத்தைப் பிடித்து இழுத்துச் சம பரப்புக்குக் கொண்டு வந்தான். அதற்குள் குடலின் பித்தநீர் பந்தாய்ச் சுருண்டு வாய்க்குள் வந்தது. அருவருப்பு. குமட்டல். குபுக்கென்று வாந்தி. .மறுபடியும் இவனின் முறை.

சுற்றியிருந்த நாய்களுக்குக் கொண்டாட்டம் தான்.

இளகியிருந்த மண்- கைபிடிக்க வாகாக இல்லாமல் வழுக்கியதில் ரெண்டு தரம் மல்லாக்கக் கீழே விழுந்தாள் சின்னப்பொண்ணு. முதுகில் புழுக்கள்

[illegible] கையில் தட்டினால் காலில் ஏறுகிறது. காலில் தட்டினால் தலையில் ஏறுகிறது. எங்கேயென்று தட்ட..?

சுரேசு தூக்கி விட மேலேயிருந்து சம்பத்து கை கொடுக்க மூச்சைப் பிடித்து மேலே ஏறினான். அப்படியே தவழ்ந்து நகர்ந்து மரத்தடியில் சுருண்டு விழுந்தான்.

"சம்பத்து..கை குடு.."

"ம்..நீ மேல வா.."

நீட்டின கையைப் பிடித்து எக்கினான் சுரேசு. பாதி ஏறும் போது மண் பாளமாய்ப் பிளந்து அவன் முகத்தில் விழுந்தது. கண்களில் விழுந்தது மூக்கில் விழுந்தது. திறந்திருந்த வாயில் விழுந்தது. உடம்பு அருவருப்பில் சிலிர்த்தது. கை நழுவியது. பதறிப்பதறித் தாவி மண்ணைப் பிடிக்க சம்பத்தின் கையைப் பிடிக்க நிமிஷத்தில் எல்லாமே கை நழுவ..தலை குப்புறக் கீழே விழுந்தான் சுரேசு.

கொழகொழவென்றிருந்த சேற்று மண், நசநசத்த புழுக்கள், அழுகிய பிணத்தின் சதை எல்லாம் கலந்திருந்த மண்ணில் முகம் அழுந்தப் போய் விழுந்ததில் அடுத்த நிமிஷமே மயக்கமானான் சுரேசு.

சம்பத்தும் சின்னப்பொன்னும் கிறக்கம் கலைந்து ஆசுவாசப்படுத்தி எழுந்திருப்பதற்குள், மணிமாறன்.. பெருங்குரலெடுத்துக் கத்தினார். பின்னாலேயே பெருங்கூட்டம்.

"என்னங்கடா பண்றீங்க? ஆளாளுக்குச் சுருண்டு ஓய்வெடுக்கறீங்களா..?"

நிலமை புரியாமல் அதட்டியவரை வெறுப்போடு பார்த்தாள் சின்னப்பொன்னு.



அந்தப் பாடையைச் சுற்றிலும்
உற்றார் சூழ்ந்து வர
அந்தப் பெற்றோர்கள் சூழ்ந்துவர
உறையோரும் முறையோரும்
சூழ்ந்துவர...
செத்த பிணம் சிவலோகம் போக
மாண்ட பிணம் வைகுந்தம் போக
அரிச்சந்திரா வழி விடு....

-அரிச்சந்திர புராணம்

## 12

"ஐயோ ராசாத்தி..இப்பிடி நாத்தம் புடிச்ச அழுகிப் போகவா உன்னைப் பெத்தேன்? தூசி கூடப் படாம ராணி மாதிரி வளர்த்தேனே... தறுதலையக் கல்யாணம் பண்ணாதேன்னு தலைதலையா அடிச்சுக்கிட்டேன். கேக்காம அழுகிப் போயிட்டியே. அடிச்சே கொன்னுருக்கானுங்களே..அவங்க நாசமாப் போகணும்...விட மாட்டேன். விட மாட்டேன். அவனோட அப்பன் ஆத்தா குடும்பமே களி திங்கணும். ஊருக்குப் போயிட்டு வர்றதுக்குள்ளே உன்னை வழியனுப்பிட்டானுவளே.... வக்கீலம்மா.... அவனுங்க குடும்பம்..... வேரறுத்துப் போவணும். எவ்வளவு செலவானாலும் பரவால்ல. அனாதைப் பொணமா பொதைச்சிருக்கானுவளே எம்பொண்ணை.."

இன்னும் இன்னுமாய்ப் புலம்பல்.

அப்பா போலிருக்கிறது. குமுறிக் குமுறி அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினார். அரற்றினார். புலம்பினார்.

"கடைசியா உன் முகத்தைக் கூட பார்க்க முடியாத படிக்கு நாஸ்தியாக்கிட்டானுங்க.....அம்மா இல்லாத பெண்ணை அருமை பெருமையா வளத்தேன்...ப்ச நிமிசமா நாசமாயிடுச்சு....எல்லாம் போச்சு.."

-முகத்திலறைந்துகொண்டு கதறினார்.

ரெண்டு ஏட்டு, வக்கீல் பெண்மணி, நண்பர்கள் என்று ஓடிவந்த கும்பல் அவரைத் தள்ளி நகர்த்தியது. அவர்களுக்கும் கூட நாற்றம் தாங்கமுடியவில்லை.

"ஏம்மா..சின்னப்பொண்ணு சட்டுப்புட்டுனு சோலிய முடிம்மா.."

மணிமாறன் அவசரப்படுத்தினார்.

"என்னா சார் அநியாயம்? பொணத்தை எடுத்துப் போட்டாச்சு. அந்தப் பையன் சுரேசு பள்ளத்துல விளுந்துட்டான் சின்னப்பையன் சார். அவனைத் தூக்க ஒரு வழியும் பண்ணலே சீக்கிரம் சீக்கிரம்னு அவசரப்படுத்தறீங்களே.."

பசி மயக்கம்.. வேலை மயக்கம்..எல்லாமாய்ச் சேர்ந்து வாய் குழறினாள் சின்னப்பொண்ணு.

"இருங்க சார்..ஏணி கொணாந்து குழில இறக்கணும்..அந்தப் பையனைத் தூக்க வேணாமா? போலீஸ்காரரே ஒரு கை குடுங்களேன்..."

"யாரு நானா? குழிலேர்ந்து தூக்கணுமா..?"

அந்தப் பெண்ணின் பிணத்தை லத்தியால் புரட்டினவர் அதிர்ந்து போய்க் கேட்டார்.

புழுக்கள் நெளுநெளுவென்று நெளிந்தன. வெட்டுக் காயம், அரிவாள் வெட்டு, குத்து, ரத்தம், விபத்து, அனாதைப்பிணமென்று ஆயிரம் பார்த்த அவருக்கே ஒரு தரம் உதறிப் போட்டது.

"நீயாம்மா டூட்டி..?"

தலையசைத்தாள் சின்னப்பொண்ணு

"ஆம்பளைங்க யாருமில்லியா? வெட்டியானுங்க எங்க போயிட்டானுங்க? இந்தப் பொணத்தை தூக்கி வேன்ல வை. நாங்க கிளம்பணும். அப்புறமா நீ குழில எறங்கு. பள்ளத்துல எறங்கு. நாங்க போஸ்ட் மார்ட்டத்துக்குப் போவணும்..."

அவரின் அவசரம் அவருக்கு.

"போலீஸு..எனக்கே நாத்தம் தாங்கல்ல நீ எப்படித் தாங்கற? வேற ஏதாச்சும் வேலைக்குப் போவக் கூடாதா..?"

"அட..இன்னா சார் நீங்க? இந்த நாத்தம் தான் சோறு போடுது எங்களுக்கு. பசியும் பட்டினியும் குடலைத் தின்னுச்சுன்னா என்ன தொளிலு வேணாம் பண்ணலாம். கொலைக் குத்தம், திருட்டு, அவுசாரி இதெல்லாம் தான் நாறத் தொளிலு. இது புண்ணியத் தொளிலு. என்னா கொஞ்சம் அசிங்கம் பார்க்காமப் பண்ணணும். அம்புட்டுத்தேன். ஒரு கை குடு சாரு.."





தம்பிடித்துத் தூக்கி..ஒற்றை ஆளாகவே ஆஸ்பத்திரி மார்ச்சுவரி வேனில் வைத்தாள்.

"ஒத்தைக்கொத்தைப் பொண்ணைப் பறிகுடுத்துட்டு நிக்கறவருட்ட என்னத்தக்கேக்க? குழி தோண்ட, பொணத்தை மேலே தூக்கன்னு மூணு ஜீவனுங்க வேலை பண்ணோம். புளு, சேறு, சகதி, அழுகின பொணம்னு முகம் சுளிக்காம வேலை பண்ணோம். ஆம்பளை வெட்டியானுங்க கூலி எம்புட்டுக் கேப்பாங்க தெரியுமா? மொதல்ல அழுகின பொணத்தைத் தொடக் கூட மாட்டனுவ. நானாக் கண்டு செஞ்சு முடிச்சேன்..இந்தா..அந்தப் பையன் குழிக்குள்ள கெடக்கானே..அவனுக்கு மருந்து மாத்திரை வாங்கித் தரக் கூடப் பைசா இல்ல.."

இவளின் முணுமுணுப்பு கூட்டத்துக்கும் எட்டியது.

"வக்கீலு..கோர்ட்டு..போலீஸுன்னு கட்டுக்கட்டாச் செலவழிக்கற ஜனம் கூட...எங்க கஷ்டத்தை ஏன்னு கேக்காது..நாற ஜென்மங்க நாங்க.."

"இந்தாம்மா பொலம்பாத.. இந்தா..அம்பது ரூவா..மூணு பேரும் எடுத்துக்கோங்க..."

அப்பாக்காரர் தந்தார்.

அடுத்த வினாடியே வண்டிகள் பறந்து விட அதிர்ந்து போனாள் சின்னப் பொண்ணு.

"ஹூம்ம் இவன் பொண்ணு சடலத்தைக் கூட இவனே தொடமாட்டான். அப்படி நாறுது..புழுல நீந்தி சகதில நனைஞ்சு தொட்டுத் தூக்கினதுக்குக் கூலி அம்பது ரூபா...பிசுநாறிப் பசங்க. அதான்..சொத்தெல்லாம் கோர்ட்டுக்கே அழிஞ்சு போவுது.."

வெட்டின குழி பக்கத்தில் குனிந்தாள்.

"சுரேசு.......சுரேசு......."

வெட்டிக் கம்பால் அவனைப் புரட்டினாள். முகமெல்லாம் சேறு அப்பிப் புழு நெளிந்தது கூடத் தெரியாமல் மயங்கியிருந்தான்.

"ஐயோ...தம்பி சுரேசு கண்ணமுளிச்சுப் பாருப்பா..யாராது வாங்களேன். இவனைத் தூக்கி விடுங்க.."

ம்ஹீம்.. அவளின் கூக்குரலுக்குப் பதில் சொல்ல நாதியில்லை. மணிமாறன் கூட வந்த கும்பலின் பின்னால் ஓடியிருந்தார்.

சுருண்டிருந்த சம்பத்தை எழுப்பிக் கைகொடுக்கச் சொன்னாள். சுரேசைத் தூக்கி மேலே வந்தாள்..சின்னப்பொண்ணு.

அப்புறம் சுரேசைப் பொறுத்த வரைக்கும் சகலமும் முடிந்து போனதாயிற்று.

கண்கள் நிலைகுத்த உட்கார்ந்தால் கொஞ்சமும் பிரக்ஞை இல்லாமல் அப்படியே உட்கார்ந்திருப்பான்.. சோறு, தண்ணி, மூத்திரம், சகலமும் உணர்வில்லாமல் தான் நடந்தது.

தாத்தா, அப்பா என்று திண்ணையிலிருந்த கும்பலில் இன்னுமொரு உருப்படியாய் சுரேசு.. சுவாசம் மட்டும் உடம்பில் தங்கியிருந்தது. அது தவிர, பேச்சில்லை.. சிரிப்பில்லை.. நடமாட்டம் இல்லை.. சுயநினைவே இல்லை.

குழியினுள்ளே விழுந்த அதிர்ச்சி. கோடி கோடியாய்ப் புழுக்களின் மேல் விழுந்த அதிர்ச்சி இப்படிச் சகலமும் அவனை நிலை குலைய வைத்தாயிற்று.. மனசு பேதலித்துப் போயிற்று.

தினக்கூலி ஜீவன்கள்.. மருந்து மாத்திரைக்குச் செலவு பண்ண முடியுமா? வேலையும் நிரந்தரமில்லை... ஒப்பந்தத் தொழில் மாதிரி தானே? மணிமாறன், உதவி ஏதும் பண்ண வழியில்லை. விதிகள் அனுமதிக்கவில்லை என்று கைவிரித்து விட்டார்.

வந்துகொண்டிருந்த கூலியில் சுரேசு கூலியும் அடிபட்டுப் போக சம்பத்தின் சுண்டைக்காய்க் கூலிக்காசு வைத்து நாக்கு வழிக்கவா?

முனியம்மாவுக்கும் வரவர இயலவில்லை. ஒன்று இரண்டாகி ரெண்டு மூன்றாகி திண்ணையை ஆக்கிரமித்த மூணு ஆம்பிளைகளுக்கும் வேளா வேளைக்குக் கஞ்சி ஆக்கித் தருவதற்குள்ளேயே தாலி அறுந்துவிடுகிறது.

சம்பத்தின் அரைக்கால் கூலியில் வாங்கும் நொய்யரிசி ரெண்டு வேளைக்குக் கூடக் காணாது. சின்னராசு ரெண்டு மூணு வாரத்துக்கொரு தரம் வருவான். அம்பது, நூறு என்று தருவான். பொட்டிக் கடை, மளிகைக்கடை என்று அதற்கும் முன்னாடியே கடன் வந்து குதிக்கும். ராணிக்கு சதாப் பொழுதும் அலங்காரமும் ஊர் சுற்றலும்தான். சீவிச் சிங்காரித்து, கண்மை, கனகாம்பரம், தாவணி சகிதமாய்ச் சுத்துப்பத்துப் பெண்களோடு குப்பத்தைச் சுத்தி வர ஆத்துப் பாலம் போக ஆலமரத்தடியில் பாண்டி ஆட,





அம்மாக்காரி ஒளித்து வைத்திருக்கும் அஞ்சு ரூபாயை லவட்டிக் கொண்டு மத்தியான ஆட்டம் போக என்று பொழுது போனது. அம்மாவுக்கு உதவி- யாய்ச் சின்னதாய்க் கிள்ளிக் கூடப் போட மாட்டாள்.

"ஏய் ராணி...சுரேசுக்கு இந்த கஞ்சிய ஊட்டி விடேன்டி..கண்ணாடில என்னத்தான் இருக்கோ? கண்ணு முளிச்ச நேரத்துலேர்ந்து இம்மா நேரமா ரவுசு பண்றியே...கூட மாட..தொவையலு அரையேன்டி பாவி.."

"ப்ச ...கூவாதம்மா... கஞ்சிய அண்ணங்காரன் சொட்டுச் சொட்டா முளுங்கும். அது குடிச்சு முடிக்கறதுக்குள்ள பொளுது விடிஞ்சுடும்..எனக்கு இந்தச் சோலியெல்லாம் ஆவாதும்மா..ஆளவுடு.."

ஏதோ ஒரு சினிமாப் பாட்டை முணுமுணுத்தபடி முழு அலங்காரத்தோடு கிளம்பி விட்டாள்.

தட்டிக் கேட்க ஆண் பிள்ளை யாருமில்லாத தைரியம்.. ரொம்பவும் துளிர்த்துப் போனாள்... அப்படி இப்படி என்று அங்கங்கே பார்த்துச் சிரித்துப் பழகினதில் பக்கத்து வீட்டுக் கருப்பனும் இவளும் கொஞ்சம் நெருக்கமாகிப் போனார்கள் தான்.

சுற்றியிருந்த தோழிகளும் தூபம் போட- உற்சாகமூட்ட, ரொம்பவே தைரியம் வந்து விட்டது.

"எண்ணண்ணே? ராணியோட ஜல்சா?"

-சின்னப் பையன் மணிக்குக் கூட விஷயம் தெரியும்படி நெருக்கம்.

இன்னமும் யாரும் முனியம்மாவின் காதுக்குப் போடவில்லை.

யாரும் பார்த்து விடுவார்களோ என்று பயந்து ஒளிந்து ஓடிவந்து அந்தத் திரையரங்கின் முன் வரிசை டிக்கெட்டில் ஜோடியாய்ப் போய் உட்கார்ந்தார்கள் ராணியும், கருப்பனும்.

அஞ்சு வரிசை தள்ளியிருந்த மாரியம்மா பார்த்துப் பக்கத்திலிருந்த பழனியிடம் காட்டினாள்.

"ஏங்க அது.. முனியம்மாக்கா பொண்ணு.. ராணி தானே...?"

"ம்.. பிஞ்சுல பழுத்திருச்சு பொண்ணு..."

ராணியின் காதல் நாடகம் திரையரங்கில் வெட்ட வெளிச்சமானது.

அம்மான்கள் அம்மான்கள்
அஞ்சாறு அம்மான்கள்
அம்மான்கள் வாசலுக்கு – நீ
அரிசி எடுக்கப் போனாயின்னு
பொட்டி பறித்து உங்கனத்தை
புறங்கையில் விட்டெறிஞ்சா– நீ
அங்கழுத கண்ணீரு
தாயார் தலை நனைஞ்சு
ஆறு குளம் பெருகி
ஆனை குளிப்பாட்டி
குண்டு குளம் பெருகிக்
குதிரை குளிப்பாட்டி
கொண்ட சனம் சமைத்துத்தின்னும்
நீயழுத கண்ணீரு
மறுகா[ல்] பாயுதம்மா.

(நாட்டுப்புறப் பாடல்)

## 13

மேலுக்கு முடியாமல் சுருண்டிருந்தாள் முனியம்மா. கஞ்சி காய்ச்சக்கூட ஏலாமல் கிறுகிறுப்பு.

ஒத்தைக்கொத்தை ராணிய 'ால் ஒரு பிரயோஜனம் இல்லாமல் போகிறது வரவர.. இன்றைக்கும் கூடக் காலையிலேயே எழுந்து கண்ணாடியும் கண்மையுமாய் சிங்காரித்துச் சிலுப்பிக் கிளம்பியவள் தான்..இன்னமும் ஆளைக் காணோம். மணி ரெண்டாயிருக்கும்.

"ஏதாச்சும் ஆக்கி எறக்கிப் பொங்கிப் போட்டு நல்வாலும் செஞ்சு பாத்தாத்தான ஒடம்பு வணங்கும் பொட்டச்சிக்கு? இது என்னடான்னா மூங்கில் கட்டையாட்டாமா கிண்ணுன்னு திரியுது. எங்கனப் போயி முட்டி மோதப் போவுதோ சிறுக்கி..."





முசுமுசுவென்று...முணுமுணுக்கக் கூட ஆவியில்லாமல் பலதும் நினைத்து உழன்று கிறங்கிக் கிடந்தாள்.

"எவடி நாயி? பொழுது உச்சிக்குப் போயி எறங்கினாவுட்டுக் கூட கஞ்சியக் கண்ணுல காட்டாம? களி மண்ணாட்டம் புள்ளை கெடக்குதுல்ல? அதுக்காச்சும் ஒருவா தரமாட்ட? பசிக்குன்னு கேக்கத்தெரியாத சென்மமாயிடிச்சு. அப்படி என்னட்டி உள்ள கிளிக்கற?"

"ஆமா.பட்டும் சரிகையுமா மூச்சடைக்குது. அதாங் கிளிக்கேன்.."

"என்னட்டி நலி பண்ணுத? வயசானவுட்டு புத்தி வரும்னாக்க.. நாளுக்கு நாளு மளுங்குது உனக்கு.. அப்பாரு காலைவ கொஞ்சம் ஊத்திக்கினாரு.. எந்திரிக்கப் பொளுதாவும். நா குந்திருக்கேன்ல? வாயத் தொறந்து கேக்கத் தெரியாம சுரேசுபுள்ள கெடக்கான்ல?"

திண்ணையிலிருந்து இருசப்பன் கோபமாய்க் கத்தினான்

"த்தா.. சும்மாக் கெட..என்னால ஆக்கிப் போட ஏலாது. பொட்டக் குட்டிய வடிக்கச் சொல்லு..சுடுசுடுன்னு சொல்லு சொல்ற சரியான ஆம்பளை இல்லாத பவுசுல ஆட்டம் போடுது பொசக்கெட்டவ.."

"ஓம் பொண்ணைத் தட்டி வைக்க உனக்குத் துப்பில்ல அங்கன இங்கன நகர முடியாமக் கெடக்கறவனை விரட்டுதியே மூதேவி ஒரு லோட்டால தண்ணி கொண்டா..."

"கட்டைல போற வரைக்கும் காரியஞ் செஞ்சே பொட்டச்சி சீரழியனும்னு எளுதிருக்கு. யாரைக் குத்தம் சொல்ல? நாலு பெ:த்தேன். நாலுமே பிரயோசனமில்லாத சென்மமாயிடிச்சு. ஒத்தைப் பைசாக்குத் துப்பில்லாத ஆம்பளப் பசங்க. ஒத்தக் கைக்கு ஒதவாத பொட்டக்குட்டி.. த்தூ... வருது வாயில.. நல்லதா.."

.மெதுவாய்க் குறுக்கைத் தாங்கலாய்ப் பிடித்து எழுந்தாள். க்க்ரிக்.. முர்ரிக்கென்று எலும்பு உராயும் சப்தம் கேட்டது. அவளால் சுத்தமாக நடமாட முடியவில்லை. பாதிக்குப் பாதி நாள் பசியும் பட்டினியுமாய் நாளும் பொழுதும் ஓடுகிறது. உடம்பில் என்ன பலம் இருக்கப் போகிறது.? உயிர் மட்டும் தான் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

"இந்தா..."

"ம்..ம்..ஒம் மவனுக்கும் குடு.."

" அம்மாக்காரிக்கு யாரும் சொல்ல வேணாம்.."